1995 ஏப்ரல் 26]

கூடங்களில் பெண்களை அமைப்பாளர்களாக நியமித்தல், இப்படி பெண்களை நியமித்து வருகின்ற நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவியினுடைய நல்ல ஆட்சியிலே, முன்சீப் கோர்ட்டிலாவது பெண்களையே முழுக்க, முழுக்க நீதிபதிகளாக நியமிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், ஒரு கருத்தை இந்த மாமன்றத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தக் கோர்ட்டுக்குப் பெயரே 'a court for women in distress' துன்பத்திலே இருக்கிற பெண்களுக்கு விடுதலை வாங்கித் தருவது என்பது. இந்த வழக்கறிஞர் பிரச்சினை இந்தியா எங்கும் பேசப்பட்டது. அப்பொழுது ஒரு நல்ல விளக்கத்தை அளித்தார்கள். 'Marital disputes in Civil courts are sought to be based on fault principle rather than breakdown theory.' எனவே, குடும்பத்திலே ஏதாவது கசப்பு வந்து விட்டால் சேர்த்து வைக்க வேண்டுமே தவிர, அவர்களை பிரித்துவிடக் கூடாது என்ற தத்துவத்திற்காக இது தோன்றியிருக்கிற காரணத்தினாலே வழக்கறிஞர்கள் வாதப்பிரதிவாதங்கள் கூடாது என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 442, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு உணவு அமைச்சர்.

442—

கிருஷ்ணகிரி தொகுதியில் நியாய விலைக் கடை அமைத்தல்

**36854*—திரு. கே. முனிவெங்கடப்பன்:

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, வேப்பனப்பள்ளி ஒன்றியம், கங்கசமுத்திரம் கிராமத்திற்கு நியாய விலைக்கடை அமைக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

[1995 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, கங்கசமுத்திரம் கிராமத்திற்கு புதிதாக நியாயவிலைக் கடை அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கங்கசமுத்திரம் கிராமம் அங்கிருந்து 3 கிலோ மீட்டருக்கு அப்பாற் சென்று, அங்கிருக்கிற ரேஷனை வாங்க வேண்டும். அதே சமயத்தில் அங்கே இரண்டு கிராமங்களுக்கும் மத்தியிலே தென்பெண்ணையாறு என்ற பெரிய நதி ஓடிக் கொண்டிருக்கிறது. ஆகவே, மழை நேரங்களில் அந்த ஆற்றிலே வெள்ளம் வரும்பொழுது, அவர்கள் அங்கே சென்று வாங்குவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே, இதற்கு ஒரு தனி அந்தஸ்து கொடுத்து, ஆவன செய்வாரா என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கங்கசமுத்திரம் என்கின்ற அந்த கிராமத்திற்கு இணைக்கப்பட்டுள்ள அந்தக் கடையில் மொத்தமாகவே 334 அட்டைகள்தான் இருக்கிறது. ஆகவே, இப்போதே அது இழப்பிலேதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 3 கிராமங்கள் அதிலே, புளியஞ்சேரி 155, கங்கசமுத்திரம் 102, கொள்ளப்பட்டி 77. இங்கே 1½ கிலோமீட்டர் தூரம்தான் என்று குறிப்புத் தந்திருக்கிறார்கள். முன்னரே, ஒரு கேள்வியிலே கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த தூரத்தை 3 கிலோமீட்டர் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், துறையிலிருந்து வந்தக் குறிப்பில் 1 அல்லது 1½ கிலோமீட்டர் என்று தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியே, 1½ கிலோமீட்டர் தூரத்திற்குள்ளேயே இருக்கிறபொழுது 334 அட்டைகள் தான் மொத்தமாக இருக்கின்றன. இப்போதே இழப்பிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற கடையை, இன்னும் பிரித்து பகுதிநேரக் கடையாக வைப்பதிலே பலன் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல ஆறு குறுக்கிடுகிறது. அங்கே, தண்ணீர் வருகிறபொழுது மக்கள் அங்கே வரமுடியவில்லை என்று சொன்னால், நீங்கள் பகுதி நேர கடை வைத்தாலும் அதே பிரச்சினை தான் வரும். அங்கே தண்ணீர் வருகிறபோது, பகுதி நேர கடைக்கு வேண்டிய சாமான்களை வேன்களிலேயோ, மற்ற வாகனங்களிலேயோ கொண்டு வரமுடியாது. அது பயன் இல்லாமல் போய்விடும். அந்த கடை 1½

1995 ஏப்ரல் 26]

கிலோமீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது. மொத்தம் 334 அட்டைகள்தான் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஏதாவது இதற்கு வாய்ப்புகள் இருக்கிறதா என்று தேடி சொன்னால், அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, 1½ கிலோமீட்டர் தூரம் என்று சொன்னார்கள். ஆற்றிலே, வெள்ளம் வராத காலத்திலே, அது குறுக்கு வழியாக செல்லும்போது, 1½ கிலோமீட்டர் தூரம்தான் உள்ளது. அந்த ஆற்றிலே வெள்ளம் வருகிறபோது, ஏறக்குறைய அருகிலே இருக்கிற அந்த தென்பெண்ணை ஆற்றிலே இருக்கிற அந்தப் பெரிய பாலத்தை கடந்து செல்லும்போது அது 3 கிலோமீட்டருக்கு மேல் அதிகமாக வருகிறது. எனவே, அப்படி பகுதி நேரக் கடையை ஆரம்பிக்க வாய்ப்பு இல்லையானாலும், மாண்புமிகு அமைச்சர், புதிய திட்டத்தை, இப்போது பெண்களாலே ஒரு குழு கொண்டு வந்து, பெண்களாலே நியமிக்கப்படுகின்ற நிர்வகிக்கப்படுகின்ற ஒரு கடையை ஆரம்பிக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கடையையாவது இங்கு ஆரம்பிப்பதற்கு அனுமதி கொடுப்பாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-15*

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அறிவுரையின்படி, எவ்வளவு அட்டைகள் இருக்கின்றன என்பதைக் கருத்திற்கொள்ளாமல், கிராமப் பகுதிகளிலே, நீண்ட தூரம் செல்ல வேண்டிய அவசியம் இருக்குமேயானால், அங்கே தனியாக அவர்களுக்கு உணவுப் பொருள்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, இப்போது உணவுத் துறை ஒரு திட்டத்தைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதன்படி, இப்போது 200 அட்டைகளோ, அல்லது 250 அட்டைகளோ, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, இப்படிப்பட்ட 100 அல்லது 110 அட்டைகளோ இருக்கிற அந்தப் பகுதிகளில், அந்த முக்கியமான கடையிலேயிருந்து—மெயின் ஷாப்பிலேயிருந்து—கொண்டுபோய், அங்கே வழங்குகிற பொறுப்பை, அந்தப் பகுதியிலே இருக்கிற யாராவது பெண்கள் ஏற்றுக் கொண்டு, அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டால், அப்படி வழங்கலாம்; அவர்களை ஒரு 'ஏஜென்ஸி' யாக அறிவிக்கலாம்

என்று இப்போது துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற பெண்களினுடைய அமைப்புகள், குறிப்பாக ஐந்தாறு மாவட்டங்களில் அவ்வாறு பணியாற்றுகிறார்கள்; அவற்றிலே தர்மபுரி மாவட்டமும் ஒன்று; அந்த அமைப்புகளின் மூலமாக இப்படிப்பட்ட கடைகளை நாம் உருவாக்க முடியுமா என்பதையும் இந்த உணவுப் பொருள்களை வழங்குகிற பொறுப்பை அவர்களிடத்திலே ஒப்படைக்க முடியுமா என்பதையும் நம்முடைய சமூகநலத் துறையோடு கலந்து பேசி ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு முயற்சியை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மேற்கொள்ளலாம். நான் முன்னரே சொன்னதைப்போல, அந்தப் பகுதியிலே இருக்கிறவர்கள் யாராவது பொறுப்பேற்றுக் கொண்டு, அந்த 102 அட்டைகளுக்கான பொருள்களை, அந்தக் கடையிலேயிருந்து வாங்கிக் கொண்டுபோய், அங்கே வினியோகிக்க முன்வருவார்களேயானால், நாம் அதற்கான நடவடிக்கை எடுக்க இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 443, திரு. உ. பலராமன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

443—

காலரா நோயை ஒழிப்பதற்குப் புதிய திட்டம்

21652*—திரு. **உ. பலராமன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் காலரா நோயை முழுமையாக ஒழிப்பதற்கு புதிய திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காலரா, குடிநீர் மற்றும் உணவு மூலம் பரவும் நோயாகும். அயல் நாடுகள் மற்றும் பிற மாநிலங்களிலுள்ள மக்கள், தங்களுடைய வியாபாரம் மற்றும் தொழில் நிமித்தமாக, பணி செய்தலின் பொருட்டு, வெளியிடங்களில் உணவு உண்ணும் நிலை, தவிர்க்க முடியாததாக உள்ளது. எனவே, பிற மாநிலங்களும் சேர்ந்து, ஒரே நேரத்தில் காலரா தடுப்பு முறைகளை மேற்கொண்டாலன்றி, அந்நோயை முழுமையான